முருகப்பெருமான் துணை

**மகான் புலிப்பாணிச் சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

16.10.2021, சனிக்கிழமை

1. ஆறுமுகனார் சூட்சும வடிவே
அறமாக வாழும் குருவே
தரும வேலி மக்களுக்கு இட்டு
தரணி காத்திடும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ தரிவை திங்கள்
வரங்களென முப்பான் திகதி காரிவாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 30ம் நாள், 16.10.2021 சனிக்கிழமை)
வழங்குவேன் உலகோர் நலம் வேண்டி
3. வேண்டியே துல்லிய ஆசிதனை
வினவிடுவேன் புலிப்பாணிச் சித்தர்யானும்
தொண்டு வழி உலகம் தேறவே
தூய ஞான ஆட்சி மலருமப்பா
4. அப்பனே மாற்றம் செய்யவே
அவதாரம் அரங்கனும் எடுத்து
சுப்பிரமண்யர் வழிபாடு தன்னை
சுத்தநெறி கொண்டு மக்கள் செய்ய
5. செய்யவே குருவாக அருளி
சிறப்பான ஞான உபதேசம்தர
அய்யமின்றி உலக மக்களும்
அரங்கன் வாழ் பிரணவக்குடிலை
6. குடிலை அனுகி இனிதே
குருவே அரங்கா முருகா என போற்றி
நாடியே ஞானதீட்சை ஏற்று
நம்பிக்கை கொண்டு தொடர்ந்து
7. தொடர்ந்து அனுதினமும் பூசை
தெரிவிப்பேன் ஞானிகள் பூசையாக
தடையின்றி செய்து வருகவே
தவசி காட்டும் தரும வழிகளை
8. வழிகளையும் ஏற்று மக்கள்
வையகம் எங்கிலும் தருமத்தை
சளைக்காது செய்து வருக
சாற்றிட தருமம் பெருக்கிட

9. பெருக்கிட புண்ணிய பலத்தால்
பிரச்சினை இல்லா வாழ்வை
கருத்தாக உலகோர் அடைந்து
கலிகாலத் துன்பங்களை வென்று

10. வென்றுமே அரங்கன் காட்டும்
வேலவன் சக்தியான ஆசிவழி
நன்றான ஞானவான்கள் ஆகி
ஞான ஆட்சி அமைய உண்டான

11. உண்டான உயர்மக்கள் ஆகி
உலகமாற்றம் செய்து சிறப்பர்
தண்டாயுதன் அருளால் மகிழ்ந்து
தரணியோர் ஞானிகள் ஆவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–